

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அரசு உருது மேல்நிலைப்பள்ளியில், கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் கல்வி மாவட்டங்களில் உள்ள 16 பள்ளிகளில் ரூ. 4 கோடியே 44 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையங்களை மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (27.06.2025) திறந்து வைத்தார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, மாநில தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர். கு.ஆ.நரேஷ், அமெரிக்கன் இந்தியா ஃபவுண்டேசன் டிஜிட்டல் ஈக்வலைசர் திட்ட இயக்குநர் பாஸ்கரன் தீனதயாளன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு விவகாரம்!

## தேர்தல் ஆணையத்துக்கு மம்தா கண்டனம்!



கொல்கத்தா, ஜுன் 28-

இந்திய தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான, புதிய நடைமுறைக்கு மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சரிபார்ப்பு தொடர்பாக, தேர்தல் ஆணையம் புதிய நடைமுறைகளை வெளியிட்டுள்ளது. அதன்படி, புதிய வாக்காளர்களை சேர்க்கும் போது பொதுமக்கள் தாங்கள் இந்திய குடிமக்கள் என்பதற்கான ஆதாரங்களை காட்ட வேண்டும், வயது, பிறப்பிட சான்றிதழ்களை வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு இந்தியா கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இது ஏழை வாக்காளர்களை அகற்றுவதற்கான நடவடிக்கை என்று புகார் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், தேர்தல் ஆணையத்தின் இந்த புதிய நடைமுறைக்கு மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு, திருத்தம் மேற்கொள்ள பிறப்பு சான்றிதழ் கேட்பது மிகப்பெரிய மோசடி திட்டம் என்று மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார். தேர்தல் ஆணையத்தின் புதிய திட்டம் என்பது தேசிய குடிமக்கள் பதிவை புறவாசல் வழியாக திணிக்கும் முயற்சி என்றும் இது என்.ஆர்.சி. பதிவை விட மோசமானது என்று அவர் சாடியுள்ளார். இதற்கு அனைத்து கட்சிகளும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்றும் எதற்காக இந்த புதிய நடைமுறை கொண்டு வரப்பட்டது என்பது குறித்து தேர்தல் ஆணையம் விளக்கம் அளிக்க வேண்டும் என்று மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி வலியுறுத்தியுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 128வது நாள்!

## எழும்பூர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை,ஜுன்.28-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 128 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (27.6.2025) எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 77, டிம்லஸ் ரோடு அருகில் கே.பி பார்க் குடிசை மாற்று வாரியம். 2) வட்டம் 78 தானா தெரு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், சொ.வேலு, வி.சுதாகர், பி.எம்.யாழினி, கோ. ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலாதேவி. மாமன்ற உறுப்பினர்கள்: பி.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, ஜி.தாமோதரன், எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்: வி. அபாய், தி.தயாளன், சு.மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்வின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல். சுந்தர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ்.முரளி, ஆர்..ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



## திருவள்ளூர் மத்திய மாவட்டம்

### பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம், நசரத்பேட்டை ஊராட்சி

### நசரத்பேட்டை பஜார் - காந்தி தெரு கலைஞர் கருணாநிதி நகர் - ராஜீவ்காந்தி நகர் - அன்பரசு நகர் ஆகிய கிளைக் கழகங்களுக்குட்பட்ட பாக எண்கள். மற்றும் கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருவள்ளூர் மத்திய மாவட்டம், பூவிருந்தவல்லி கிழக்க ஒன்றியத்திற்குட்பட்ட நசரத்பேட்டை ஊராட்சியில் உள்ள நசரத்பேட்டை கிளைக் கழகம், நசரத்பேட்டை பஜார் - காந்தி தெரு கலைஞர் கருணாநிதி நகர் - ராஜீவ்காந்தி நகர் - அன்பரசு நகர் ஆகிய 4 கிளைக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அக்கிளைக் கழகங்கள் பின்வரும் வாக்குச் சாவடி பாக எண்கள் கொண்டதாக அமையும்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட கிளைகளுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**நசரத்பேட்டை பஜார் கிளை :** 348, 349 ஆகிய 2 வாக்குச் சாவடி பாக எண்கள்.

**காந்தி தெரு கலைஞர் கருணாநிதி கிளை :** வாக்குச் சாவடி பாக எண். : 345

**ராஜீவ்காந்தி நகர் கிளை :** 350, 351 ஆகிய 2 வாக்குச் சாவடி பாக எண்கள்.

**அன்பரசு நகர் கிளை :** 352, 353 ஆகிய 2 வாக்குச் சாவடி பாக எண்கள்.

### கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

ஏற்கனவே பிரிக்கப்படாத நசரத்பேட்டை கிளைக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த எஸ்.சங்கர் அவர்கள் முழு ஈடுபாட்டுடன் கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை கிளைச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, தற்போது மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட நசரத்பேட்டை பஜார் - காந்தி தெரு கலைஞர் கருணாநிதி நகர் - ராஜீவ்காந்தி நகர் - அன்பரசு நகர் ஆகிய கிளைக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**நசரத்பேட்டை பஜார் கிளை :**
பொறுப்பாளர் : **த.திருமலைராஜ்**, 327, காமராஜர் சாலை, நசரத்பேட்டை–600 123.

**காந்தி தெரு கலைஞர் கருணாநிதி நகர்கிளை :**
பொறுப்பாளர் : **டி. தருமன்**, 2/2, காந்தி தெரு, நசரத்பேட்டை–600 123.

**ராஜீவ்காந்தி நகர் கிளை :**
பொறுப்பாளர் : **ந.ச.பாலன்**, 786, ராஜீவ்காந்தி நகர், நசரத்பேட்டை–600 123.

**அன்பரசு நகர் கிளை :**
பொறுப்பாளர் : **டி. ஜெயராமன்**, 900, அன்பரசு நகர், நசரத்பேட்டை–600 123.

"அண்ணா அறிவாலயம்''
சென்னை – 18.
நாள் : ..–06–2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



### மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது

# ஒகேனக்கல் அருவிக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு!

தருமபுரி, ஜுன் 28-

கர்நாடக அணைகளில் இருந்து நீர்திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால், ஒகேனக்கல் அருவிக்கு விநாடிக்கு 70 ஆயிரம் கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து ஒரே நாளில் 20 ஆயிரம் கன அடி அதிகரித்து, 70 ஆயிரம் கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இதனிடையே, ஒகேனக்கல் அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலாப் பயணிகள் குளிக்க 3வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது. கர்நாடக அணைகளில் தண்ணீர் திறப்பு அதிகரிப்பால் நீர்வரத்து மேலும் அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இதேபோல், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஒரே நாளில் 4 ஆயிரம் கனஅடி நீர் அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி மேட்டூர் அணைக்கு 44 ஆயிரம் கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் நீர்மட்டம் 114 அடியாக உள்ள நிலையில், மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக 22 ஆயிரத்து 500 கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே, கர்நாடகாவின் மண்டியா மாவட்டம் கிருஷ்ணராஜ சாகர் அணையின் நீர்மட்டம் 121 அடி அணையாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து 52 ஆயிரத்து 829 கன அடியாக உள்ள நிலையில், அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு 51 ஆயிரத்து 110 கன அடியாக அதிகரித்துள்ளது. இதே போன்று, மைசூர் மாவட்டம் கபிணி அணையின் நீர்மட்டமும் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. அணையின் மொத்த உயரம் 84 அடியாக உள்ள நிலையில், தற்போது நீர்மட்டம் 79.33 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து 31,644 கன அடியாக உயர்ந்துள்ளது. அணையில் இருந்து நீர் வெளியேற்றம் 30,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

### மணவாள நகரில் திருவள்ளூர் சட்ட மன்றத் தொகுதி நிதியிலிருந்து

# ரூ. 30 லட்சம் மதிப்பில் புதிய நவீன பேருந்து நிறுத்தம்!

## வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருவள்ளூர், ஜுன் 28:

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம் வெங்கத்தூர் ஊராட்சி மணவாள நகரில் இருந்து போளிவாக்கம்,தொடுகாடு, செங்காடு, மப்பேடு, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு போன்ற பல் வேறு பகுதிகளுக்கு வேலைக்கு கல்லூரிக்கு பள்ளிக்கு மணவாளநகர் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமானோர் அரசு மற்றும் தனியார் பேருந்து மூலம் செல்ல வேண்டும்

ஏற்கனவே இருந்த பேருந்து நிழற்குடையும் சாலை விரிவாகத்திற்காக இடித்து அகற்றப்பட்டது. இதனால் பொதுமக்கள் மழை காலங்களிலும் வெயில் காலங்களிலும் பேருந்து நிழற்குடை இல்லாமல் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வந்தனர்.

அதே நேரத்தில் ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் போன்ற பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து நூற்றுக்கணக்கான பேருந்துகள் வேன்கள் திருவள்ளூர் மற்றும் பிற பகுதிகளில் இருந்து மணவாள நகர் வழியாக தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு செல்கிறது. இதனால் அந்தப் பேருந்தில் செல்லும் தொழிலாளர்களும் வெயிலிலும் மழையிலும் காத்திருந்து செல்ல வேண்டிய நிலை இருந்தது.

இந்நிலையில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 30 லட்சம் மதிப்பில் மணவாளநகர் ஸ்ரீபெரும்புதூர் சாலையில் புதிய பேருந்து நிறுத்தம் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அதன் திறப்பு விழா நடைபெற்றது. திருவள்ளூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் தலைமை தாங்கி புதிய பேருந்து நிறுத்தத்தை திறந்து வைத்தார்.

இந்தப் பேருந்து நிறுத்தத்தில் வைஃபை வசதி ஏற்படுத்தப்பட்டு இருப்பதால் பொதுமக்கள் இதனை பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக இருக்கும். மேலும் இதில் சிசிடிவி கேமராவும் பொருத்தப்பட்டிருப்பதால் அப்பகுதியில் ஏற்படும் குற்ற செயல்களையும் தடுக்க முடியும்.

இந்த விழாவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கோட்ட மேலாளர் வெங்கடேசன், கிளை மேலாளர் பாஸ்கரன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ.) எஸ்.சௌந்தரி, (கி.ஊ.) எஸ்.செல்வி, மாவட்ட அவைத்தலைவர் கே.திராவிட பக்தன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆதிசேஷன், ஒன்றிய செயலாளர்கள் அரிகிருஷ்ணன், ரமேஷ், முன்னாள் நகர மன்ற தலைவர் பொன் பாண்டியன், கமலக்கண்ணன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வழக்கறிஞர் நாகராஜ், தாடி நந்தகோபால், வி.எஸ். நேதாஜி, கே.ஏ.மதியழகன், பி.ஆர்.பிரபாகரன், புட்லூர் ஆர்.ராஜேந்திர குமார், ஒன்றிய நிர்வாகிகள் ராஜசேகர், செங்குட்டுவன், கொப்பூர் டி.திலீப்குமார், பி.சரவணன், ஆர்.மோகன சுந்தரம், டில்லி, சங்கர், வாசு, சேகர், சத்யா, பெருமாள், பாலசுப்பிரமணியம், சதீஷ், ராம்கி உள்பட பலர் கலந்து கொண்டனர்.





## தி.மு.க. இளைஞர் அணி

### முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

**சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு சென்னை வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | பகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 07.07.2025 | பெரம்பூர் வடக்குப் பகுதி | கண்ணதாசன் நகர் ஈ.பி. அருகில் | தாயகம் கவி எம்.எல்.ஏ.<br>அ.தஸ்னீம் பானு |
| 2 | | ஆர்.கே.நகர் மேற்குப் பகுதி | எழில் நகர் பி–பிளாக் | சைதை சாதிக்<br>நாகம்மை கருப்பையா<br>க.ஹேமநாதன் |
| 3 | 08.07.2025 | இராயபுரம் மேற்குப் பகுதி | தாளமுத்து நடராஜன் மன்றம் அருகில் | கரூர் முரளி<br>குமரி பிரபாகரன்<br>மு.மு.முஸ்தாக் |
| 4 | | பெரம்பூர் தெற்குப் பகுதி | பழனியாண்டவர் கோயில் தெரு | தமிழ் க.அமுதரசன்<br>சாய் ரித்திக் சக்திவேல் |
| 5 | 09.07.2025 | ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி | மேயர் பாசுதேவ் தெரு | ஈரோடு இறைவன்<br>நா.நரேன் கௌதம் |
| 6 | | இராயபுரம் கிழக்குப் பகுதி | காமராஜர் நகர் | போடி காமராஜ்<br>செ.ஜோதி |

**சென்னை**
நாள் : 27.06.2025

கலைஞர் 100 1924 - 2023

